மாலைக்கதிர்
Maalaikkathir

சாயல் 01 வள்ளுவர் ஆண்டு 2054 ஆடி 24 வெள்ளிக்கிழமை 11.08.2023 கதிர் 48



செய்திகளையும் இன்னும் பல காணொளிகளையும் பார்வையிட
காலைக்கதிர் TV
காலைக்கதிர் TV YouTube தளம்


# உள்நாட்டுக் கடன் மறுசீரமைப்புத் திட்டம் சபாநாயகரின் தீர்ப்பை முன்வைத்து



## நாடாளுமன்றத்தில் கடும் அமளி துமளி

உள்நாட்டுக் கடன் மறுசீரமைப்பு வேலைத் திட்டம் தொடர்பான தனது தீர்ப்பை வாபஸ் பெறுமாறு எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் விடுத்த கோரிக்கையை சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன இன்று நிராகரித்துள்ளார்.

சட்டமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட தீர் மானத்துக்கு எதிராக எந்த வகையிலும் உத்தரவு பிறப்பிக்க நீதித்துறைக்கு அதிகா ரம் இல்லை என்று ஓகஸ்ட் 9 ஆம் திகதி சபா நாயகர் அளித்த தீர்ப்பு தவறான முன்னு தாரணமாக அமையும் என்றும், அதுநீதித் துறை மற்றும் நாடாளுமன்றம் ஆகிய வற்றுக் கிடையே மோதலுக்கு வழிவகுக்கும் என்றும் எதிர்க்கட்சி எம்.பி.க்கள் தெரிவித்தனர்.

இதற்குப் பதிலளித்த சபாநாயகர், நான் சட்ட ஆலோசனையை நாடினேன். தீர்ப்பை வழங்குவதற்கு முன்பு சம்பந்தப்பட்ட அனைத்து விடயங்களையும் பார்த்தேன். மேலும், எனது தீர்ப்பில் எந்த நீதிமன்ற வழக் கையும் நான் குறிப்பிடவில்லை. எனவே, நான் அதை திரும்பப் பெறமாட்டேன், என்றார்.

சபாநாயகரிடம் ஆரம்பக் கோரிக்கையை முன்வைத்த அனுரகுமார திஸாநாயக்க, இந்த தீர்ப்பு ஆபத்தான முன்னுதாரணமாக அமையும் என்றார்.

2 ➤

## மலையக மக்களைத் தேசிய நீரோட்டத்தில் இணைக்க வேண்டும்! மக்கள் பிரதிநிதிகளுடனான சந்திப்பில் ஜனாதிபதி தெரிவிப்பு

நாட்டுக்கு அந்நியச் செலாவணியை ஈட்டித் தருவ தற்காக இரண்டு நூற்றாண்டுகளாக உழைத்து வரும் மலையகத் தமிழ் மக்களைத் தொடர்ந்தும் தனியான இனக் குழுவாக அன்றி இலங்கைச் சமூகத்துடன் இணைத்துக்கொள்ள வேண்டும் என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வலியுறுத்தினார்.

இந்தப் பணி மிகவும் சவால் நிறைந்தது என்றாலும் இதற்கான வேலைத்திட்டமொன்று அவசியம் என்றும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

மலையகத் தமிழ் மக்களைப் பிரதிநிதித்துவப் படுத்தும் அமைச்சர் ஜீவன் தொண்டமான் மற்றும் இராஜாங்க அமைச்சர் அ.அரவிந்குமார், நாடாளு மன்ற உறுப்பினர் எம்.ரமேஸ்வரன் ஆகியோருடன் ஜனாதிபதி அலுவலகத்தில் இன்று இடம்பெற்ற கலந்துரையாடலின்போதே ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார்.

இந்தக் கலந்துரையாடலில் மலையகத் தமிழ் மக்களுக்கே உரித்தான பிரச்சினைகள்

2 ➤

## கைது செய்யப்பட்ட பல்கலை மாணவர்களுக்கு பிணை!

அனைத்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத் தினால் மேற்கொண்டிருந்த எதிர்ப்புப் பேரணியின் போது, கைது செய்யப்பட்ட மாணவர்களுக்கு பிணை வழங்கப்பட்டுள்ளது.

குறித்த மாணவர்கள் நீதிபதி முன்னிலையில் நேற்றிரவு முன்னிலைப்படுத்தப்பட்டதையடுத்து தலா 25,000 ரூபா சரீரப் பிணையில் அவர்கள் விடுவிக் கப்பட்டுள்ளனர்.

எதிர்வரும் 14 ஆம் திகதி அவர்களை நீதிமன்றத் தில் மீண்டும் ஆஜர்படுத்துமாறு நீதிபதி

2 ➤

## குறைந்த விலையில் எரிபொருள் விற்க சினோபெக் கோரிக்கை

இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனத்தின் எரிபொருள் விலையை விடக் குறைந்த விலையில் எரிபொருளை விற்பனை செய்வதற்கு சினோபெக் எண்ணெய் நிறுவனம் இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திடம் கோரிக்கை விடுத்துள்ளது.

அதன்படி, இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத் தாபனத்தின் எரிபொருள் விலையை விடவும் ஒவ் வொரு ரக எரிபொருளுக்கும் லீற்றருக்கு 3 ரூபாய் குறைத்து விற்பனை செய்வதற்கு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

எனினும், அந்தக் கோரிக்கைக்கு இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம்

2 ➤

## சிதைவடைந்த நிலையில் குழந்தையின் சடலம் யாழ்.மாநகரசபை ஆணையாளரையும்

### நீதிமன்றில் முன்னிலையாகுமாறு உத்தரவு

யாழ்ப்பாணம் ஆறுகால்மட பகுதியில் சிதைவடைந்த நிலையில் குழந்தையின் சடலம் மீட்கப்பட்ட சம் பவம்தொடர்பிலான விசாரணைகளுக் காக யாழ்.நீதவான் நீதிமன்றில் எதிர்வரும் 16ஆம் திகதி முன்னி லையாகுமாறு யாழ்.மாநகர சபை ஆணையாளர் உள்ளிட்ட மூவருக்கு கட்டளை வழங்கப்பட்டுள்ளது.

ஆறுகால்மடம், கோம்பயன்மணல் மயானத்திற்கு அருகில் உள்ள காணி ஒன்றினுள் இருந்து நேற்றைய தினம் வியாழக்கிழமை சிதைவடைந்த நிலையில் குழந்தை ஒன்றின் சடலம் மீட்கப்பட்டது.

சம்பவம் தொடர்பாக யாழ்ப்பா ணப் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ள நிலையில், நேற்றைய தினம் யாழ்.நீதவான் நீதிமன்ற நீதவான் மற்றும் யாழ். போதனா வைத்தியசாலை சட்ட வைத்திய அதிகாரி உள்ளிட்டோர் சம்பவ இடத்திற்கு நேரில் சென்று விசாரணைகளை

2 ➤

## காங்கேசன்துறை சீமெந்துத் தொழிற்சாலை இரும்புத் திருட்டுடன் எனக்கு சம்பந்தமில்லை!

### அமைச்சர் சாமர சம்பத் சபையில் சவால்

காங்கேசன்துறை சீமெந்து தொழிற் சாலையில் இடம்பெறும் இரும்பு திருட் டுடன் இராஜாங்க அமைச்சர் சாமர சம்பத் தசநாயக்கவுக்கு தொடர்பு இருப்பதாக முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

குற்றப்புலனாய்வுத்திணைக்களத்தில் நேற்று இந்த முறைப்பாடு முன்வைக் கப்பட்டுள்ளது.

சீமெந்துக் கூட்டுத்தாபனத்தின் முன் னாள் பணிப்பாளர் செனரத் பெரேரா மற்றும் முன்னாள் தலைவர் காமினி ஏக்கநாயக்க ஆகியோரினால் இது தொடர்பான முறைப்பாடு சமர்ப்பிக்கப் பட்டுள்ளது.

இந்த நிலையில் தன்னில் பிழை இருக்குமாயின் சி.ஐ.டி.யினர் தன்னை வந்து கைதுசெய்யுமாறு இராஜாங்க அமைச்சர் சாமர சம்பத் நாடாளுடன்றில் தெரிவித்துள்ளார்.

நான் இதற்கு முன்னரும்

2 ➤

## நீர்மட்டங்கள் வெகுவாகக் குறைகின்றன நீர்ப்பாசனத் திணைக்களம் எச்சரிக்கை

நீர்ப்பாசனத் திணைக்களத்தின் கட்டுப்பாட்டில் உள்ள 73 நீர்த்தேக்கங் களின் நீர் மட்டங்கள் வெகுவாகக் குறைந் துள்ளதுடன், 9 லட்சம் ஏக்கர் அங்குல நீர்க்கொள்ளளவு மாத்திரமே பயன்பாட் டிற்கு உள்ளதாகவும் திணைக்களம் தெரிவித்துள்ளது.

நீர்க்கொள்ளளவில் 30.3 சதவீதம் மட்டுமே உள்ளதாகவும், அதனையே பயன்படுத்த முடியும் என்றும் திணைக்க ளத்தின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

நீர்ப்பாசனத் திணைக்களத்தின் கட்டுப்பாட்டில் உள்ள 73 நீர்த்தேக்கங்க ளில், 10 சதவீதத்திற்கும் குறைவான நீர் கொள்ளளவு கொண்ட ஒன்பது நீர்த் தேக்கங்களும், 30 சதவீதத்திற்கும் குறை வான நீர் கொள்ளளவு கொண்ட 32 நீர்த்தேக்கங்களும் உள்ளன. மொத்த நீர்த்தேக்கங்களின் நீர்க் கொள்ளளவு 50 சதவீதத்திற்கும் குறைவாகவே உள்ளது என அவர் தெரிவித்தார்.

நீர்த்தேக்கங்களின்

2 ➤

இலங்கையிலிருந்து வெளிவரும் மாலை செய்தி இதழ்

# கீரிமலைக் கேணியையும் தொல்லியல் திணைக்களம் தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர நினைப்பது

## கண்டிக்கத்தக்கது - இந்து மாமன்றம் அறிக்கை

வரலாற்றுச் சிறப்புமிக்கதும் சைவ மக்களின் முக்கியமான சமய சம்பிரதாயங்களோடு தொடர்புடையதுமான கீரிமலை கேணியையும் தொல்லியல் திணைக்களம் தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர முயற்சிப்பது கண்டிக்கத்தக்கது என அகில இலங்கை இந்து மாமன்றம் கண்டனம் தெரிவித்து அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளது.

ஒவ்வொரு சைவ ஆதாரங்களையும் தொல்லியல் திணைக்களம் கையகப்படுத்த நினைப்பதும், அதற்கான கண்டனங்கள் வெளிநாடுகள் வரை சென்று எதிரொலிக்கும்போது தமது செயற்பாடுகளிலிருந்து திணைக்களம் தற்காலிகமாக பின்வாங்குவதும் என்று, சைவ மக்கள் தமது அடையாளங்களை ஒன்றன் பின் ஒன்றாக இழந்துவரும் இக்கட்டான நிலைக்கு இட்டுச் செல்வது மிகவும் கவலைக்குரியது.

இவ்வாறான செயற்பாடுகள் முளையிலேயே கிள்ளியெறியப்பட வேண்டும். இப்படியான சமிக்ஞைகளால் அரசாங்கம் சைவத் தமிழ் மக்களின் நம்பிக்கையைப் பெறுவதற்கான அதன் முயற்சிகளில் பாரியளவில் பாதிப்பு ஏற்படும்.

கீரிமலைக் கேணி, தமது நீத்த உறவினர்களின் பிதிர்க்கடன்களை நிறைவேற்ற வெளிநாடுகளிலிருந்தும் சைவமக்கள் வந்து செல்கின்ற இடமாகும்.

ஈழத்தில் பஞ்ச ஈஸ்வரங்களில் ஒன்றான நகுலேஸ்வரத்தின் அருகில் அமைந்துள்ள இந்தக் கேணி, பல நூற்றாண்டு காலப் பழமை வாய்ந்தது. இது ஒரு நூற்றாண்டு காலத்துக்கும் மேலாக வலி வடக்குப் பிரதேச சபையால் நிர்வகிக்கப்பட்டு வருகிறது.

சைவத் தமிழ் மன்னன் இராவணனோடும் இராமாயணத்தோடும் தொடர்புடைய திருக்கோணேஸ்வர ஆலய சுற்றாடலில் வெளியார் ஆக்கிரமிப்பு, கன்னியா வெந்நீரூற்று தொடர்பாக தொல்லியல் திணைக்களத்தின் தலையீடு, அண்மையில் பறாளாய் முருகன் கோவிலில் உள்ள ஓர் அரச மரத்தைப் பற்றிய சர்ச்சை, வெடுக்குநாறி மலை ஆதி லிங்கேஸ்வரர் ஆலயம் அழிக்கப்பட்டமை, பின்னர் அதன் தொடர்ச்சியாக ஏற்பட்ட சர்ச்சைகள் என சைவ மக்களுக்கு எதிரான செயற்பாடுகள் தொடர்கின்றன.

எனவே, இத்தகைய அநீதியான செயலைத் தடுத்து நிறுத்துவதோடு, சிறுபான்மை மக்களின் மத வழிபாடுகளைத் தடுக்கின்ற செயற்பாடுகளைக் கட்டுப்படுத்த வேண்டும் என கேட்டுக்கொள்கின்றோம்.

நாங்கள் எந்த மதத்துக்கும் எதிரானவர்கள் அல்லர். ஆனால், எமது மத வழிபாட்டைத் தடை செய்ய எவருக்கும் உரிமையில்லை. அத்தகைய செயற்பாடுகளை தடுக்க வேண்டும் என மாண்புமிகு ஜனாதிபதியையும் அரசாங்கத்தையும் கேட்டுக் கொள்கின்றோம், என்று அவர்களது அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (கோ)

# சீனாவின் போர்க் கப்பல் இலங்கையில்!

சீனாவின் உயுஜ லுயுபே 24 உயுமு என்ற போர்கப்பல் இன்று காலை சம்பிரதாயப் பயணமாக கொழும்புத் துறைமுகத்தை வந்தடைந்ததாக கடற்படை தெரிவித்துள்ளது. 129 மீற்றர் நீளம் கொண்ட இந்தக் கப்பலில் 138 பணியாளர்கள் பணிபுரிகின்றனர். கொமாண்டர் ஜின் சின் இதற்குத் தலைமை தாங்குகிறார்.

இந்த கப்பல் நாளை இலங்கையில் இருந்து புறப்பட உள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

## உள்நாட்டுக் கடன் மறுசீரமைப்புத் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எந்தவொரு நீதிமன்ற வழக்கு தொடர்பாகவும் நீதித்துறை எந்தத் தீர்ப்பையும் வழங்கவிடாமல் தடுக்கப்படும் சூழ்நிலை எதிர்காலத்தில் ஏற்படும் என்பதால், உங்கள் தீர்ப்பு ஓர் ஆபத்தான முன்னுதாரணமாகும். நீங்கள் எப்பொழுதும் நிர்வாகியை மகிழ்விக்க முயற்சிப்பதாகத் தெரிகின்றது. எனினும் உள்நாட்டு கடன் மறுசீரமைப்புக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட மனுவை நீதிமன்றங்கள் தள்ளுபடி செய்துள்ளன. அரசாங்கம் விரும்பியது கிடைத்துள்ளது. எனவே உங்கள் தீர்ப்பை திரும்பப் பெறுமாறு கேட்டுக்கொள்கிறேன். அதைச் செய்தால் உங்களாலும் உங்கள் கௌரவத்தைப் பாதுகாக்க முடியும், என அனுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.

சபாநாயகர் வழங்கிய தீர்ப்பு அரசியலமைப்பு நெருக்கடிக்கு வழிவகுக்கும் என நாடாளுமன்ற உறுப்பினர் ஜி.எல்.பீரிசும் தெரிவித்துள்ளார்.

உங்கள் தீர்ப்பின் விளைவாக எதிர்காலத்தில் சட்டத்தின் ஆட்சி உடைந்துவிடும். இது அரசியலமைப்பு நெருக்கடிக்கும் வழிவகுக்கும் என ஜி.எல். பீரிஸ் குறிப்பிட்டார்.

உள்நாட்டு கடன் மறுசீரமைப்பு தொடர்பில் நீதிமன்றங்கள் தீர்ப்பு வழங்குவதற்கு முன்னர் சபாநாயகர் தீர்ப்பை வழங்கியதன் மூலம், நீதித்துறையில் செல்வாக்கு செலுத்தியதாக எதிர்க்கட்சியின் பிரதம கொறடா லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்தார்.

மறைந்த சபாநாயகர் அநுர பண்டாரநாயக்க வழங்கிய முந்தைய தீர்ப்பை நீங்கள் உங்கள் சொந்த தீர்ப்பில் மேற்கோள் காட்டியுள்ளீர்கள். எவ்வாறாயினும், முன்னாள் பிரதம நீதியரசர் சரத் சில்வா மீதான குற்றப் பிரேரணை தொடர்பாக நீதிமன்றில் தீர்ப்பு வழங்கப்படுவதற்கு முன்னதாகவே அவர் அதனை வழங்கியுள்ளார், எனவும் அவர் கூறினார்.

எதிர்க்கட்சி எம்.பி.க்களுக்கு பதில் அளித்த சபைத் தலைவர் சுசில் பிரேமஜெயந்த, ஒரு குறிப்பிட்ட சட்டமன்றம் அரசியலமைப்புக்கு இசைவானதா? என்பதை மட்டுமே நீதித்துறை ஆராய முடியும் என்றார்.

தற்போதைய சபாநாயகர் சட்டமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை மட்டுமே குறிப்பிட்டு, நாடாளுமன்றத்தின் மேலாதிக்கத்தை உறுதிப்படுத்தினார். அவர் எந்த நிலையிலும் நீதித்துறைக்கு சவால் விடவில்லை என்று பிரேமஜெயந்த தெரிவித்தார்.

அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா, சபாநாயகர் வழங்கிய தீர்ப்புகளை எவராலும் சவால் செய்ய முடியாது என்றார்.

அவர் மீதான நம்பிக்கையில்லா பிரேரணை மூலம் மட்டுமே சபாநாயகர் வழங்கிய தீர்ப்பை ஒருவர் சவாலுக்கு உட்படுத்த முடியும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (மி)

## கைது செய்யப்பட்ட பல்கலை .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உத்தரவிட்டுள்ளார்.

நேற்று கிருலப்பனை மற்றும் விஹாரமஹாதேவி பூங்கா ஆகிய இடங்களில் முன்னெடுக்கப்பட்ட மாணவர் பேரணியின் மீது நீர்த்தாரைப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டு, அதனால் பதற்றமாக சூழ்நிலை ஏற்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## மலையக மக்களைத் தேசிய ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மற்றும் தற்போதைய பொருளாதார நெருக்கடிகளால் ஏற்பட்டுள்ள நிலைமைகள் குறித்தும் கவனம் செலுத்தப்பட்டது.

இங்கு கருத்துத் தெரிவித்த ஜனாதிபதி, இருநூறு ஆண்டுகளுக்கும் மேலாக நாட்டின் பொருளாதாரத்தை வலுப்படுத்த மலையகத் தமிழ் மக்கள் பாடுபட்டதாகவும், இன்றும் நாட்டின் பொருளாதாரத்தை முன்னெடுப்பதில் அவர்கள் முக்கிய பங்காற்றுவதாகவும் தெரிவித்தார்.

1983 கலவரத்தின் பின்னரும் அந்த மக்கள் பிரிவினைவாதப் போக்குகளையோ அல்லது ஆயுதம் ஏந்திய பயங்கரவாதச் செயற்பாடுகளையோ கைக்கொள்ளவில்லை. மாறாக அவர்கள் இலங்கை அரசின் மீதும் தெற்கு சமூகத்தின் மீதும் நம்பிக்கையுடன் செயற்பட்டனர், என்றும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

மலையகத் தமிழ் மக்களுக்கு இலங்கைக் குடியுரிமை வழங்குவதற்காக ஜே.ஆர்.ஜயவர்தனவின் ஆட்சிக் காலத்தில் ஆரம்பிக்கப்பட்ட வேலைத்திட்டத்தை நிறைவு செய்வதற்காக முன்னாள் அமைச்சர் ஆறுமுகன் தொண்டமானுடன் இணைந்து பிரதமர் என்ற வகையில், 2003 ஆம் ஆண்டில் செயற்பட்டதையும் ஜனாதிபதி நினைவுகூர்ந்தார்.

அத்துடன், மலையகத் தமிழ் மக்களின் பிரச்சினைகளைத் தீர்த்து அவர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கான திட்டமிட்ட வேலைத்திட்டத்தை முன்னெடுக்கும் நோக்கில், மலையக மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அனைத்து அரசியல் கட்சிகளுடனும் கலந்துரையாடவுள்ளதாகவும் ஜனாதிபதி குறிப்பிட்டார்.

அந்த மக்களை மலையகத் தமிழர்களாகவோ அல்லது தோட்டப்புற மக்களாகவோ வாழ வைப்பதற்குப் பதிலாக இலங்கைச் சமூகத்தில் ஏனைய மக்களுடன் ஒன்றிணைப்பதே தமது எதிர்பார்ப்பு என்றும் அவர் கூறினார்.

தற்போதும் பெருந்தோட்டங்களில் இருந்து கொழும்புக்கு வந்த குறிப்பிட்ட எண்ணிக்கையிலான மக்கள், சமூகத்தில் உள்வாங்கப்பட்டுள்ள போதிலும், அனைத்து மக்களையும் சமூகத்துடன் ஒன்றிணைக்கும் சவாலை வெற்றியடையச் செய்வதில் அந்த மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்துபவர்களால் விசேட பங்களிப்பை ஆற்ற முடியும் என்றும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார். (O3)

## சிதைவடைந்த நிலையில் .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முன்னெடுத்தனர்.

அதன்போது, போதனா வைத்தியசாலையில் உரிமை கோரப்படாத சடலங்கள் , சத்திர சிகிச்சையின்போது அகற்றப்படும் உடல் உறுப்புக்கள் என்பவை மாநகர சபை ஊடாக கோம்பயன்மணல் மயானத்திலேயே புதைக்கப்பட்டு வந்துள்ளன.

அவ்வாறு புதைக்கப்படுவதை மாநகர சபைப் பணியாளர்கள் உரிய முறையில் மேற்கொள்வதில்லை. அதனால், நாய்கள் உள்ளிட்ட விலங்குகள் அவற்றை இழுத்துச் செல்வதாகவும், அதனால் அப்பகுதியில் துர்நாற்றம் வீசுவதால், அப்பகுதி மக்கள் பல அசௌகரியங்களுக்கு முகம் கொடுத்து வந்துள்ளனர்.

இந்த நிலையிலையே, யாழ்.மாநகர சபை ஆணையாளர், அப்பகுதிக்கான பொதுச் சுகாதாரப் பரிசோதகர் மற்றும் கோம்பயன்மணல் மயானத்திற்குப் பொறுப்பான உத்தியோகஸ்தர் ஆகிய மூவரையும் எதிர்வரும் 16ஆம் திகதி மன்றில் முன்னிலையாகுமாறு நீதவான் கட்டளையிட்டுள்ளார். (O1)

## குறைந்த விலையில் எரிபொருள் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இன்னும் பதிலளிக்கவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

சினோபெக்கிற்கு இலங்கையில் 130 எரிபொருள் நிலையங்கள் ஒதுக்கப்பட்டுள்ளதுடன், மேலும் 20 எரிபொருள் நிலையங்களை சினோபெக்கிற்கு வழங்க அரசாங்கம் ஒப்புக்கொண்டுள்ளது.

இந்த நிலையில் சினோபெக் நிறுவனத்திற்குச் சொந்தமான எரிபொருள் நிரப்பு நிலையங்களில் இருந்து எரிபொருள் விநியோகத்தை ஆரம்பிக்க இன்னும் இரண்டு வாரங்கள் செல்லும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

## காங்கேசன்துறை சீமெந்துத் .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இது தொடர்பாக கூறியிருந்தேன். காங்கேசன்துறை சீமெந்து தொழிற்சாலையில் இடம்பெறும் இரும்புத் திருட்டுடன் எனக்கு சம்பந்தம் இருப்பதாக முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

நான் இது குறித்து தெளிவுபடுத்தியிருந்தேன். நான் இப்போது சி.ஐ.டி.க்கு செல்கின்றேன். என்னை கைது செய்யுமாறு அவர்களிடம் கூறுங்கள். நான் பிழை செய்திருந்தால் என்னைக் கைதுசெய்ய வேண்டுமல்லவா? ஆதாரமின்றி வெறுமனே முறைப்பாடு அளிக்க முடியாது, என அவர் மேலும் தெரிவித்தார்.

## நீர்மட்டங்கள் வெகுவாகக் ............

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நீர்மட்டத்தைப் பொறுத்தவரையில், நீண்ட கால ஆய்வுகளின்படி, தற்போதைய நீர்மட்டம் இரண்டு அல்லது மூன்று சதவீதம் குறைவடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அப்பகுதியில் நிலவும் வெப்பமான காலநிலை மிகவும் அதிகமாக உள்ளது. அதன் காரணமாக, நீர்த்தேக்கங்களில் நீர் ஆவியாதல் மிக அதிகமாக உள்ளது. அதை எங்களால் கட்டுப்படுத்த முடியாது என்று அவர் மேலும் தெரிவித்தார்.

வளிமண்டலவியல் திணைக்களத்தின் கணிப்பின்படி, ஒக்டோபர் மாதத்திற்குள் மழையால் நீர்த்தேக்கங்கள் நிரம்பும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (மி)

உங்கள் பிரதேசத்து
நிகழ்வுகள் பற்றிய
விபரங்களை எமக்கு அனுப்பிட
maalaikkathir@gmail.com




# அறிவகம் சனசமூக நிலையத்தின் 68 ஆவது ஆண்டு நிறைவு விழா

முருகன் கோவிலடி, புலோலி வட மேற்கில் அமைந்துள்ள அறிவகம் சன சமுக நிலையத்தின் 68 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நிலைய உறுப்பி னர்கள் விளையாட்டு நிகழ்வுகளையும் கலை நிகழ்வுகளையும் நடாத்தத் தீர்மா னித்துள்ளனர்.

அதன்படி, எதிர்வரும் 15 ஆம் திகதி வெள்ளிக்கிழமை, வெளிக்கழக மாண வர்களுக்கான சிறப்பு விளையாட்டு களான 50 கிலோமீற்றர் சைக்கிள் ஓட்டப் போட்டி, 10 கிலோமீற்றர் மரதன் ஓட்டப் போட்டிகள் மந்திகைச் சந்தியில் காலை 6 மணியளவில் ஆரம்பமாகவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் மைதான நிகழ்வுகளான கயிறு இழுத்தல், 1500 மீற்றர் ஓட்டம், 4 தர 400 மீற்றர் அஞ்சல் ஓட்டம் மற்றும் பலூன் உடைத்தல் போன்ற போட்டி நிகழ் வுகள் அன்று மாலை 5.30 மணிக்கு ஆரம்பமாகும்.

போட்டியில் வெற்றி பெறும் வீரர்களுக் கான பரிசில்கள் அன்றைய மைதான நிகழ்வுகளின் பின்னர் இடம்பெறும் வைபத்தில் வழங்கப்படும்.

கலை நிகழ்வுகள் மறுநாள் 16 ஆம் திகதி சனிக்கிழமை மாலை இடம்பெற வுள்ளன.

போட்டிகளில் பங்குபற்ற விரும்பும் வீரர்கள் 077 520 1721 மற்றும் 076 916 7494 ஆகிய தொலைபேசி இலக் கங்களைத் தொடர்பு கொண்டு தங்களது பதிவுகளை மேற்கொள்ளலாம் என விழாக் குழுவினர் தெரிவித்துள்ளனர். (மி)

# கனலி மாணவர் சஞ்சிகையின் நான்காவது இதழ் வெளியீடு





யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஊடகக் கற்கைகள் துறையின் ஏற்பாட்டில் கனலி மாணவர் சஞ்சிகையின் நான்காவது இதழ் வெளியிடும் நிகழ்வானது துறைத் தலைவர் பூங்குழலி சிறீசங்கீர்த்தனன் தலைமையில் பல்கலைக்கழக நூலகக் கேட்போர் கூடத்தில் நேற்று வியாழக் கிழமை பிற்பகல் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக பல்கலைக்கழக பதில் துணைவேந்தர் பேராசிரியர் செ.கண்ணதாசனும் சிறப்பு விருந்தினராக கலைப்பீடப் பீடாதிபதி பேராசிரியர் சி.ரகுராமும் கலந்துகொண் டனர். சஞ்சிகையை கலைப்பீட பீடாதிபதி சி.ரகுராம் வெளியிட முதல் பிரதியை யாழ்ப்பாணப் பல்கலைக்கழக பதில் துணைவேந்தர் பேராசிரியர் செ.கண்ண தாசன் பெற்றுக்கொண்டார்.

நிகழ்வில் வாழ்த்துரையை பிஷப் சவுந்தரம் மீடியா சென்டர் இயக்குநர் ரூபன் மரியாம்பிள்ளை அடிகளும், ஆய் வுரையை யாழ்ப்பாணக் கல்வி வலய ஆசிரிய ஆலோசகர் ஜோ.ஜோன்சன் ராஜ்குமாரும் மதிப்பீட்டு உரையை யாழ்ப்பாணப் பல்கலைக்கழக சைவ சித் தாந்தத்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் தி.செல்வமனோகரனும் மேற்கொண்ட னர்.

ஊடகக் கற்கைகள் துறையின் மூன் றாம் வருட மாணவர்களால் உருவாக்கப் பட்ட கனலி சஞ்சிகையானது மாண-வர்களின் ஆக்கங்களைத் தாங்கியே வெளிவருவதுடன் இம்முறை நாட்டார் ஊடக சிறப்பிதழாகவும் மிளிர்ந்துள்ளது.

இந்த நிகழ்வில் ஊடகக்கற்கைகள் துறை சிரேஸ்ட விரிவுரையாளர் தினேஸ் கொடுதோர், விரிவுரையாளர் அனு தர்ஷி கபிலன், ஊடகவியலாளர்கள், பல்கலைக்கழக விரிவுரையாளர்கள், பல்கலைக்கழக உத்தியோகத்தர்கள், மாணவர்கள், பழைய மாணவர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (O1)

# வட மாகாண பளுதூக்குதல் போட்டிகளில் வவுனியா நெளுக்குள மாணவர்கள் சாதிப்பு

வட மாகாண ரீதியிலான 2023 ஆம் ஆண்டுக்கான பாடசாலைகளுக்கு இடையிலான பளு தூக்கல் போட்டிகள் கடந்த 8, 9 ஆம் திகதிகளில் யாழ் மத் திய கல்லூரியில் இடம்பெற்றன.

இந்தப் போட்டிகளில் பங்குபற்றிய வவுனியா நெளுக்குளம் பாடசாலை மாண வர்கள் பல பதக்கங்களையும், நிலைகளையும் பெற்றுள்ளனர்.

ஆண், பெண் இருபாலருக்குமான பளுதூக்கும் போட்டிகளில் 17 வயது ஆண்கள் 61 கிலோகிராம் எடைப் பிரிவில் 112 கிலோகிராம் பளுவைத் தூக்கி ஜெ. ஜதுர்சன் தங்கப் பதக்கமும், 73 கிலோகிராம் எடைப் பிரிவில் 126 கிலோ கிராம் பளுவைத் தூக்கி கி. சுபிஸ்கரன் வெள்ளிப் பதக்கமும், 20 வயது ஆண் கள் 67 கிலோகிராம் எடைப் பிரிவில் 140 கிலோகிராம் பளுவைத் தூக்கி அ.கோகுலன் தங்கமும், 17 வயது பெண்கள் 81 கிலோகிராம் எடைப் பிரிவில் 66 கிலோகிராம் பளுவைத் தூக்கி ச.பிரியங்கா வெண்கலப் பதக்கமும், யோ. சாருஜன், கா .பிரியதர்சன், அ.பிரகீஷ், க. லா முறையே 4 ஆம், 5ஆம் இடங்க ளையும் பெற்று நெளுக்குளம் கலைமகள் மகா வித்தியாலயத்துக்கும் மாவட்டத் திற்கும் பெருமை சேர்த்துள்ளனர். (கோ)





# தமிழ்நாட்டு மீனவர்களைத் தாக்கிய நபர்கள் 7 லட்சம் பெறுமதியான பொருட்கள் பறிமுதல்



வேதாரண்யத்துக்கு அருகே உள்ள கோடியக் கரைக்கு தென்கிழக்கு கடல் பகுதியில் வலைவிரித்து மீன்பிடித்து கொண்டிருந்த, நாகை மாவட்டம் வேதாரண்யம் அருகே உள்ள ஆறுகாட்டுத்துறை, வானவன் மகாதேவி உள்ளிட்ட பகுதிகளை சேர்ந்த மீனவர்கள் மீது தாக்குதல் நடத்திவிட்டு 7 லட்சம் ரூபா பெறுமதியான பொருட்களைப் பறித்துச் சென்றுள்ளதாகக் கூறப்படுகிறது.

5 பைபர் படகுகளில் நேற்று முன்தினம் இரவு கடலுக்கு மீன்பிடிக்கச் சென்ற 19 மீனர்களை 2 பைபர் படகுகளில் அங்கு வந்த இலங்கையைச் சேர்ந்த 6 பேர், மீனவர்களின் படகுகளில் ஏறிக்கொண்டு தாங்கள் வைத்திருந்த கத்தி, கம்பி உள்ளிட்ட ஆயுதங்களைக் காட்டி மிரட்டியதுடன், மீனவர்கள் மீது தாக்குதலும் நடத்தியதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அத்தோடு, தமிழக மீனவர்களிடம் இருந்து 4 கைத் தொலைபேசிகள், 5 ஜி.பி.எஸ். கருவிகள், பட்டரிகள், 500 கிலோ மீன்கள், 30 லீற்றர் டீசல் உள்ளிட்ட 7 லட்சம் மதிப்புள்ள பொருட்களை பறித்துவிட்டு, மீனவர்களை கரைக்கு செல்லும்படி விரட்டியுள்ளதாகக் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

தாக்குதலுக்கு உள்ளான மீனவர்களிடம் இந்திய கடலோர காவல் படை அதிகாரிகள், வேதாரண்யம் கடலோர காவல் குழும பொலிசார், மீன்வள அதிகாரிகள் மற்றும் 'கியூ' பிரிவு பொலிசார் விசாரணை நடத்தியுள்ளனர்.

அனைத்து மீனவர்களுக்கும் உள்காயம் ஏற்பட்டுள்ளதாகவும், வானவன்மகாதேவியை சேர்ந்த சிவலிங்கம் என்பவர் கம்பியால் தாக்கப்பட்டு அவருக்கு காலில் காயம் ஏற்பட்டுள்ளதாகவும்

இலங்கை கடற்படையினர் மற்றும் கடல் கொள்ளையர்களால் மீன்பிடித் தொழிலுக்கு தொடர்ந்து அச்சுறுத்தல் ஏற்பட்டு வருவதாக வேதாரண்யம் மீனவர்கள் முறையிட்டுள்ளனர்.

## மூன்றாம் சார்ல்ஸின் அதிகாரபூர்வ சிறப்பு நாணயம் வெளியிடப்பட்டது



பிரித்தானிய மன்னர் மூன்றாம் சார்ல்ஸின் முடிசூட்டலைக் குறிக்கும்வகையில்மேலும்ஒரு தொகுதி சிறப்பு நாணயங்கள் வெளியிடப்பட்டுள்ளன.

நாடு முழுவதும் உள்ள தபால் அலுவலகம் மற்றும் வங்கிக் கிளைகளில் 50 பென்ஸ் சிறப்பு நாணயங்களைப் பெறலாம் என பிரித்தானிய நாணயங்களை அதிகாரபூர்வமாகத் தயாரிக்கும் த ரோயல் மிண்ட் நிறுவனம் தெரிவித்துள்ளது.

இந்த நாணயம் மன்னரின் அதிகாரபூர்வ உருவப்படம் பொறித்த புழக்கத்தில் வந்துள்ள இரண்டாவது நாணயமாகும்.

கடந்த ஆண்டு டிசம்பரில், மூன்றாம் சார்ல்ஸ் மன்னராக முடிசூடிய வரலாற்று மாற்றத்தைக் குறிக்கும்வகையில் முதல் நாணயம் வெளியிடப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (மி)



## ஹவாய் தீவின் காட்டுத் தீயில் சிக்கி 53 பேர் உயிரிழந்தனர்

அமெரிக்காவின் ஹவாய் தீவில் ஏற்பட்ட தீ விபத்தில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 53 ஆக உயர்ந்துள்ளது.

ஹவாய் தீவின் மயுய் என்ற இடத்தில் ஏற்பட்ட காட்டு தீ காரணமாக 1,700 க்கும் அதிகமான கட்டடங்கள் நெருப்பில் எரிந்து நாசமாகியுள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

வரலாற்றுப்பிரசித்திபெற்ற நகரமான லஹைனாவில் 80 வீதமான பகுதி அழிந்துவிட்டதாக ஹவாய் மாகாண ஆளுநர் தெரிவித்துள்ளார்.

நேற்றைய நிலைவரப்படி, உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 36 ஆக இருந்தது. மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவந்த 17 பேர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்ததை அடுத்து பலி எண்ணிக்கை 53 ஆக உயர்ந்துள்ளது.

இந்த நிலையில், ஹவாய் காட்டுத் தீ பெரும் இயற்கைப் பேரழிவு என அமெரிக்க அதிபர் ஜோ பைடன் அறிவித்துள்ளார்.

தொடர்ந்து எரிந்து வரும் நெருப்புக் காரணமாக பதினோராயிரத்துக்கும் அதிகமானோர் பாதுகாப்பான இடங்களுக்கு வெளியேற்றப்பட்டுள்ளனர்.

அடிக்கடி காட்டுத் தீயால் பாதிக்கப்படும் கலிபோர்னியாவில் இருந்து ஹவாய்க்கு மீட்பு மற்றும் தேடுதல் பணிகளுக்காக பல குழுக்கள் அனுப்பப்பட்டுள்ளதாக கலிபோர்னிய ஆளுநர் தெரிவித்துள்ளார். (மி)

## 45 ஆண்டுகள் சிறைத்தண்டனை

கொலம்பியாவில் இடம்பெற்று வரும் பாரிய போதைப் பொருள் கடத்தல் மற்றும் அது சம்பந்தமான கொலைகளுடன் தொடர்புடைய குழுவொன்றின் தலைவனான ஒடோனியல் என அழைக்கப்பட்ட டெய்ரோ அன்டோனியோ உசுகருக்கு நீதிமன்றம் 45 ஆண்டுகள் சிறைத்தண்டனை வழங்கியுள்ளது.

வடக்கு கொலம்பியாவின் பெரும் பகுதியை தன் கட்டுப்பாட்டில் வைத்திருந்த ஒடோனியல், அமெரிக்காவிற்குள் கடத்திவரப்பட்ட பலதொன்கள் போதைப் பொருள் கடத்தலை நிர்வகித்திருந்த நிலையில், ஒடோனியலின் தலைக்கு அமெரிக்கா பலகோடிபரிசைவழங்குவதாக அறிவித்திருந்தது.

இந்த நிலையில், 2021ஆம் ஆண்டு தனது மறைவிடத்தில் இருந்த ஒடோனியல் கைது செய்யப்பட்டபோது, ஆயுள் தண்டனையை அமெரிக்க அரசாங்கம் வழங்கக் கூடாது என்று கொலம்பியா கேட்டுக்கொண்டது. இந்த கோரிக்கையை அமெரிக்கா ஏற்றுக் கொண்டது.

அதன் பின்னர், அமெரிக்காவுக்குக் கொண்டு செல்லப்பட்ட ஒடோனியல் மீது வழக்குத் தொடரப்பட்டது. நேற்று நடைபெற்ற இறுதிக்கட்ட விசாரணையின்போது, தனது குற்றங்களை ஒப்புக்கொள்வதாகவும், தனது செயல்களுக்கான பொறுப்பை ஏற்றுக்கொள்வதாகவும், தன்னால் பாதிக்கப்பட்டவர்களிடம் மன்னிப்பு கோருவதாகவும் ஒடோனியல் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (கோ)

## போதைப் பொருள் குறைந்து வருகிறது தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின்

சென்னை கலைவாணர் அரங்கத்தில் நடைபெற்ற போதைப் பொருட்கள் இல்லாத தமிழ்நாடு என்ற நிகழ்ச்சியில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் கலந்துகொண்டு உரையாற்றியிருந்தார்.

அப்போது அவர், போதைப் பொருட்கள் இல்லாத தமிழ்நாடு - என்ற நோக்கத்தோடு கடந்த ஆண்டு இந்தத் திட்டம் தொடங்கப்பட்டது.

போதைப் பொருள் புழக்கத்தைக் கட்டுப்படுத்த வேண்டும். போதைப் பொருட்கள் விற்பனை மற்றும் கடத்தலில் ஈடுபடுபவர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பனவே இந்தத் திட்டத்தின் நோக்கங்கள்.

தமிழகத்தில் போதைப் பொருள் நடமாட்டம் குறைந்து வருகிறது. இதற்காக அக்கறையோடும், பொறுப்போடும் செயல்படும் காவல்துறைக்கு எனது நன்றிகள். இதே ஆர்வத்தோடு செயல்பட்டு முற்றிலுமாக போதைப் பொருள் நடமாட்டத்தை ஒழிக்க வேண்டும் என கேட்டுக்கொள்கிறேன்.


இந்தத் திட்டம் தொடங்கப்பட்டபோது மருத்துவர்களும், பொதுமக்களும் இது சிறப்பான திட்டம் என்றார்கள். போதைப்பொருட்களை ஒழிக்க தமிழ்நாடு அரசு தொடர்ந்து நடவடிக்கை எடுத்து வருகிறது. ஆட்சிக்கு வந்த நாள் முதல் கஞ்சா உள்ளிட்ட போதைப் பொருட்களை ஒழிப்பதில் நாங்கள் தீவிரமாக இறங்கியுள்ளோம்.

போதைப்பொருட்களின் பயன்பாடு மாநிலத்தின் வளர்ச்சியைப் பாதிக்கும். போதைப்பொருட்களால் பாதிக்கப்பட்ட மாணவர்களை மீட்கும் பொறுப்பு அரசுக்கு உள்ளது. போதைப்பொருட்களை விற்பனை செய்வோரின் வங்கிக் கணக்குகள் முடக்கப்பட்டு வருகின்றன.



போதைப்பொருள் இல்லாத தமிழ்நாடு என்ற இலக்கில் அரசு உறுதியாக உள்ளது, என்று தெரிவித்துள்ளார்.

# தனிப்பட்ட முறையில் என்னை பலருக்குப் பிடிக்காது – ஜனாதிபதி



அரசியல் வட்டாரத்தில் பலருக்கு தனிப்பட்ட முறையில் தம்மைப் பிடிக்கவில்லை என்பதை தாம் அறிவதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

கொழும்பு கிங்ஸ்பரியில் நடைபெற்ற இலங்கையின் தொழில்சார் சங்கங்களின் அமைப்பின் 36 ஆவது வருடாந்த மாநாட்டில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார்.

எல்லா விமர்சனங்களையும் மீறி நான் எனது பணியை ஏற்றுக்கொண்டேன். பின்னர் பொருளாதாரத்தை மிக வேகமாக மாற்றுவதற்கான வாய்ப்பு இருந்தது. அரசியல் அமைப்பில் உள்ள அனைவருக்கும் நான் நன்றி சொல்ல வேண்டும், அவர்கள் என்னை விரும்புவதால் அல்ல, என்று நான் நினைக்கிறேன்.

தனிப்பட்ட முறையில் என்னை விரும்புபவர்கள் அதிகம் என்று நான் நினைக்கவில்லை. ஆனால், தரப்பட்ட வேலையைச் செய்ய வேண்டும் என்பது அவர்களுக்குத் தெரியும், என்றும் அவர் அங்கு குறிப்பிட்டார்.

அரசியல் கவனச்சிதறல்களைவிட ஆக்கபூர்வமான தீர்வுகளின் முக்கியத்துவத்தை எடுத்துக்காட்டி, இந்த ஆரம்ப வெற்றியைக் கட்டியெழுப்ப வேண்டியதன் அவசியத்தையும் ஜனாதிபதி விக்கிரமசிங்க இதன்போது வலியுறுத்தினார். (மி)

# கடவுச்சீட்டு விண்ணப்பங்களை சரியான முறையில் சமர்ப்பிக்குமாறு கோரிக்கை!

ஒன்லைன் முறை மூலம் கடவுச்சீட்டு விண்ணப்பங்களை சமர்ப்பிக்கும்போது சரியாகப் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்குமாறு பொது மக்களிடம் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

குடிவரவு குடியகல்வு திணைக்களத்திற்கு 50,330 இணையவழி விண்ணப்பங்கள் கிடைத்துள்ளதாக குடிவரவு குடியகல்வுக் கட்டுப்பாட்டு ஆணையாளர் நாயகம் தெரிவித்துள்ளார்.

பொதுவான சேவையின் கீழ் 41,588 விண்ணப்பங்கள் கிடைத்துள்ள நிலையில் அதில் 26,972 விண்ணப்பங்கள் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களாக சகல ஆவணங்களுடன் ஏற்றுக் கொள்ளப்பட்டு, இதுவரை 6,405 கடவுச்சீட்டுகள் வழங்கப்பட்டுள்ளன.

குறைபாடுள்ள ஆவணங்களுடன் அனுப்பப்பட்ட 14,676 விண்ணப்பங்கள் தொடர்பாக, குறைபாடுள்ள ஆவணங்களை மீள அனுப்புமாறு விண்ணப்பதாரர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாகவும் ஆணையாளர் நாயகம் தெரிவித்தார். (கோ)




# பொலிஸ் அதிகாரம் குறித்து அமைச்சர் - கூட்டமைப்பு பேச்சு

அரசமைப்பின் 13ஆவது திருத்தச் சட்டத்தில் பொலிஸ் அதிகாரப் பகிர்வு தொடர்பில் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சில் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் மற்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் இடையே விசேட கலந்துரையாடல் நடைபெற்றது.

இந்தக் கலந்துரையாடலில் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ், பொலிஸ் அதிகாரங்களைக் கோருவதற்கான காரணங்களைக் கேட்டறிந்தார்.

உலக நாடுகளை முன்னுதாரணமாகக் கொண்டு அதிகாரப் பகிர்வின் அவசியத்தைக் கூட்டமைப்பு எம்.பிக்கள் இங்கு விளக்கியதுடன் தமிழர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் குறித்தும் கலந்துரையாடினர்.

பொலிஸ் அதிகாரங்களைப் பகிர்ந்துகொள்ளாமல் இந்தப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான வழிகள் குறித்து அமைச்சர் கலந்துரையாடினார்.

இங்கிலாந்து, இந்தியா போன்ற நாடுகளில் கூட அதிகாரப் பகிர்வு மிகவும் சிறப்பான முறையில் இடம்பெற்றது என்று சுட்டிக்காட்டிய கூட்டமைப்பு எம்.பி.க்கள், அங்கு பயன்படுத்தப்படும் முறைகளை இலங்கையிலும் நடைமுறைப்படுத்த முடியும் எனவும் விளக்கமளித்தனர்.

இதன்போது, இங்கிலாந்து மற்றும் இலங்கையின் அரசியல் மற்றும் சமூக கலாசாரங்கள் முற்றிலும் வேறுபட்டவை என்று அமைச்சர் டிரான் அலஸ் சுட்டிக்காட்டினார். 13ஆவது திருத்தத்தை அமுல்படுத்த வேண்டியதன் முக்கியத்துவத்தையும் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் கேட்டறிந்தார்.

மாவட்டக் குழுக்களில் எடுக்கப்படும் தீர்மானங்களை நடைமுறைப்படுத்துவதற்கு நீண்ட தூரம் சென்று கொழும்பு வர வேண்டியிருப்பதாலும், சிலரது தீர்மானங்களை நடைமுறைப்படுத்துவதில் சிக்கல் உள்ளதாலும் 13ஆவது திருத்தச் சட்டத்தை அமுல்படுத்த வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் தெரிவித்தனர்.

அத்துடன், பொலிஸ் அதிகாரங்களை வழங்குவது தொடர்பான உத்தேச விடயங்களில் புதிதாக எதுவும் சேர்க்கப்படவில்லை எனவும், ஆனால் தேசிய பொலிஸ் ஆணைக்குழுவுக்கு மேலதிகமாக மாகாண பொலிஸ் ஆணைக்குழுவையும் நியமிக்க வேண்டிய தேவை இருக்கின்றது எனவும் கூட்டமைப்பு எம்.பிக்கள் சுட்டிக்காட்டினர்.

மாகாண சபைகள் முறை உருவாக்கப்பட்டபோதே, பொலிஸ் அதிகாரங்களை வழங்குவதும் சட்டமூலத்தில் உள்ளடக்கப்பட்டுவிட்டாதாகவும், ஜனாதிபதி நினைத்தால் ஒரு வர்த்தமானி அறிவித்தல் மூலம் அதனை நடைமுறைக்குக் கொண்டுவரலாம் எனவும் அமைச்சரிடம் எடுத்துரைக்கப்பட்டது.

வடக்கு மாகாணம் முழுவதும் போதைப்பொருள் மற்றும் குற்றச் செயல்கள் அதிகரித்துள்ளன என்றும், அதிகமான சிறுவர்கள் போதைப்பொருளுக்கு அடிமையாகி இருக்கின்றனர் என்றும் கூட்டமைப்பு எம்.பிக்கள் இதன்போது தெரிவித்தனர்.


போதைப்பொருள் மற்றும் பாதாள உலக அமைப்புகளுக்காக நியமிக்கப்பட்டுள்ள விசேட பொலிஸ் குழுவுக்கு இவ்வாறான விடயங்கள் தொடர்பில் கிடைக்கும் தகவல்களை எந்த நேரத்திலும் வழங்க முடியும் என்றும், அவ்வாறான தகவல்களின் இரகசியத்தன்மை பாதுகாக்கப்படும் என்றும் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் உறுதியளித்தார்.

பிரதிப் பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோன் தலைமையில் உரிய விசேட பொலிஸ் குழு அமைக்கப்பட்டுள்ளது என்றும், இது தொடர்பான தகவல்களைப் பிரதிப் பொலிஸ்மா அதிபருடன் எந்த நேரத்திலும் கலந்துரையாட முடியும் என்றும் அமைச்சர் டிரான் அலஸ் தெரிவித்தார்.

கடந்த ஒன்பதாம் திகதி மாலை நடைபெற்ற இந்தச் சந்திப்பில், பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் வியானி குணதிலக, பொலிஸ்மா அதிபர், சி.டி.சி.டி.விக்கிரமரத்ன, மேல் மாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னகோன் மற்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களான எம்.ஏ.சுமந்திரன், சாணக்கியன் இராசமாணிக்கம், தர்மலிங்கம் சித்தார்த்தன், சார்ள்ஸ் நிர்மலநாதன், செல்வம் அடைக்கலநாதன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

கூட்டமைப்பு எம்.பிக்களின் வேண்டுகோளுக்கு இணங்க இரண்டு வாரங்களுக்குள் இது குறித்து அடுத்த கட்டப் பேச்சுக்களை நடத்த இரு தரப்பினரும் இணக்கம் கண்டனர். (03)

# அவுஸ்திரேலியாவிலும் 'எரிஸ் - ஈஜி5 ' தொற்று சுகாதாரத்துறையினர் விடுத்துள்ள எச்சரிக்கை



பிரித்தானியாவில் கண்டறியப்பட்ட 'எரிஸ் - ஈஜி5' என்ற கொரோனா வைரஸின் புதிய திரிபு, அவுஸ்திரேலியாவிலும் வேகமாகப் பரவிவருவதாக செய்திகள் வெளியாகியுள்ளன.

இதுவரையில், அவுஸ்திரேலியாவில் 100 தொற்றாளர்கள்வரை அடையாளம் காணப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

'எரிஸ் - ஈஜி5' என்பது கொவிட் 19 ஒமிக்ரோன் வைரஸின் துணை வகை என மருத்துவ நிபுணர்கள் தெரிவித்துள்ளனர்.

புதிய திரிபானது, முந்தைய திரிபுகளைவிட அதிக வீரியம் மிக்கதா?, என்பது தொடர்பில் இதுவரையில் கண்டறியப்படவில்லை எனினும் இந்த புதிய திரிபு வேகமாக பரவும் அபாயமிக்கது எனவும், கொவிட் தொற்றுக்கான தடுப்பூசியைப் பெறுவதில் அவுஸ்திரேலியர்கள் மத்தியில் பின்னடைவு காணப்படுவதனால், இது பெரும் தாக்கத்தை ஏற்படுத்தும் எனவும் எச்சரிக்கப்பட்டுள்ளது.

# பதுளை வைத்தியசாலைக்கு மீண்டும் மின் விநியோகம்!



பதுளை போதனா வைத்தியசாலையின் பல பிரிவுகளுக்கான மின் கட்டணம் நிலுவையில் இருந்ததால் மின் விநியோகம் துண்டிக்கப்பட்டிருந்தது.

இந்த நிலையில் இலங்கை மின்சார சபையினால் மீண்டும் மின் விநியோகம் வழங்கப்பட்டுள்ளது.

வைத்தியசாலையின் மின்சாரக் கட்டணம் 70 மில்லியன் ஆகக் காணப்பட்ட நிலையில், தாதியர் பயிற்சி மையம், மருத்துவர்கள் தலைமையகம் மற்றும் தாதியர் விடுதி ஆகிய பகுதிகளுக்கான மின் இணைப்பை நேற்றுக் காலை இலங்கை மின்சார சபை துண்டித்திருந்தது.

ஆனால், மருத்துவமனை நிர்வாகம் 20 மில்லியன் ரூபா நிலுவைத் தொகையைச் செலுத்தி, மீதமுள்ள நிலுவைத் தொகையை ஒரு வாரத்திற்குள் செலுத்துவதாக எழுத்துப்பூர்வமாக தெரிவித்ததையடுத்து, இலங்கை மின்சார சபை வைத்தியசாலைக்கு மின் விநியோகத்தை மீள வழங்கியுள்ளது.

வைத்தியசாலை நிர்வாகத்தின் இவ்வாறான பொறுப்பற்ற முகாமைத்துவ செயற்பாடுகளினால் வைத்தியர்கள் மற்றும் வைத்தியசாலை ஊழியர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதாக அரசாங்க மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் ஊவா மாகாண இணைப்பாளர் பாலித ரக்கபக்ச தெரிவித்தார்.

இதேவேளை, பதுளை போதனா வைத்தியசாலையின் குடிநீர்க் கட்டணங்கள் உட்பட ஏனைய கட்டணங்களை உள்ளடக்கிய 9.8 மில்லியன் ரூபா நிலுவைகளை இன்னமும் செலுத்தவில்லை என்று தரவுகள் குறிப்பிடுகின்றன. (மி)

# வெள்ளவத்தையில் 8 மாடிக் கட்டடத்தில் இருந்து தவறி விழுந்து தமிழ் இளைஞர் பரிதாப மரணம்!

கொழும்பு, வெள்ளவத்தை, பிரெட்ரிகா வீதிப் பகுதியிலுள்ள 8 மாடிக் கட்டடத்தில் இருந்து தவறி விழுந்து இளைஞர் ஒருவர் பரிதாபகரமாக உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்று (10) மாலை இடம்பெற்றுள்ளது என்று வெள்ளவத்தைப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

வெள்ளவத்தையைச் சேர்ந்த 24 வயதுடைய தமிழ் இளைஞரே இவ்வாறு உயிரிழந்துள்ளார். மாடிக்கட்டடத்தில் இருந்து கீழே விழுந்தவர், சிகிச்சைக்காகக் களுபோவில வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட நிலையில் சிகிச்சை பலனின்றி மரணமடைந்துள்ளார். (03)

# பெரிய நீலாவணை பொது மக்களுக்கு பொலிஸார் விடுத்துள்ள அறிவித்தல்

(பாறுக் ஷிஹான்)

பெரிய நீலாவணை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பிரதேசங்களில் அண்மைக்காலமாக நகைகளைத் திருடும் சம்பவங்கள் அதிகரித்துக் காணப்படுவதால் பொது மக்கள் அவதானமாக இருக்குமாறு பெரியநீலாவணை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி அறிவித்துள்ளார்.

நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார ஸ்திரத்தன்மை உட்பட இதர பிரச்சினைகளைச் சாதகமாக்கி, மக்கள் மத்தியில் சிலர் குழப்பங்களை வீணாக ஏற்படுத்தி, இவ்வாறான திருட்டுக்களில் குழுக்களாகவும் தனி நபராகவும் செயற்பட்டு வருகின்றனர்.

அண்மையில்கூட 8 பவுண் பெறுமதியுள்ள தங்கத் தாலிக்கொடி உள்ளிட்ட பெறுமதியான நகைகள் பெரியநீலாவணை பொலிஸ் பிரிவில் திருடப்பட்டுள்ளதாக பல்வேறு முறைப்பாடுகள் எமக்குக் கிடைக்கப்பெற்றுள்ளன.

எனவே, வீதி ஓரங்கள், பொது இடங்கள் மற்றும் வியாபார நிலையங்களில் யாராவது சந்தேகத்திற்கிடமாக நடமாடினால் உடனடியாக பொலிஸாருக்கு அறியத் தருமாறு கேட்டுக்கொள்கின்றோம், என அறிவுறுத்தப்பட்டுள்ளது.

பாண்டிருப்பு, மருதமுனை, பெரிய நீலாவணை ஆகிய பிரதேசங்களில் நகைகள், மோட்டார் சைக்கிள்கள் திருட்டு அதிகரித்துக் காணப்படுவதாக அதிகமான முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

இதேவேளை, பொலிஸ் நிலையத்தில் விரைவாக முறைப்பாடு செய்யும் பட்சத்தில் சந்தேக நபர்களை உடனடியாகக் கைதுசெய்வதற்கு பெரியநீலாவணை பொலிஸ் நிலையம் துரித நடவடிக்கை எடுக்கும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.



# கச்சதீவை மீட்க வேண்டும் என்று தி.மு.க தரப்பால் மத்திய அரசுக்கு கடிதங்கள் அனுப்பப்படுகின்றன

## நம்பிக்கை இல்லா பிரேரணைக்கு பதிலளித்த மோடி

நம்பிக்கை இல்லாப் பிரேரணை மீதான விவாதத்துக்கு பதில் அளித்து உரையாற்றிய இந்திய பிரதமர் மோடி, தி.மு.க.வையும் கடுமையாக விமர்சித்துள்ளார்.

கச்சதீவை மீட்க வேண்டும் என்று தி.மு.க தரப்பில் இருந்து மத்திய அரசுக்கு கடிதங்கள் அனுப்பப்பட்டு வருகின்றன. கச்சத்தீவை பிரதமர் நரேந்திர மோடி மீட்க வேண்டும் என்று தமிழக முதல்வர் ஸ்டாலின் தொடர்ந்து வலியுறுத்துகிறார்.

கச்சதீவை இலங்கைக்கு தாரை வார்த்தது யார்? இந்திரா காந்தி ஆட்சிக் காலத்தில்தான் அது இலங்கைக்கு தாரை வார்க்கப்பட்டது. இந்தியாவை உடைப்பதே காங்கிரஸின் வரலாறாக உள்ளது. தமிழகத்தில் பாரத மாதாவுக்கு பூசை செய்யப்படுவது தடுக்கப்பட்டுள்ளது.

பாரத மாதா குறித்து சிலர் மோசமாக பேசியதால் ஒட்டுமொத்த இந்தியாவும் வருத்தம் அடைந்துள்ளது. அவர்களை மக்கள் மன்னிக்கமாட்டார்கள்.

காங்கிரஸ் கூட்டணியில் உள்ள தி.மு.க தலைவர் ஒருவர், தமிழ்நாடு, இந்தியாவில் இல்லை என்று பேசியுள்ளார்.

எதிர்க்கட்சித் தலைவர்கள் தங்களை சுயபரிசோதனை செய்துகொள்வது அவசியம். ராஜாஜி, காமராஜர், எம்ஜிஆர், அப்துல் கலாமை கொடுத்தது தமிழ் மண் என்பதை மறந்துவிட வேண்டாம், என்றும் பிரதமர் மோடி குறிப்பிட்டிருந்தார்.



# ஒருநாள் உலகக்கிண்ண கிரிக்கெட் புதிய அட்டவணை வெளியானது

ICC MEN'S CRICKET WORLD CUP INDIA 2023

இந்த வருடம் நடைபெறவுள்ள ஒரு நாள் சர்வதேச உலகக்கிண்ண கிரிக்கெட் தொடருக்கான புதிய அட்டவணையில், முன்னதாக அறிவித்த 9 லீக் போட்டிகளுக்கான திகதிகளை மாற்றி, புதிய அட்டவணையை சர்வதேச கிரிக்கெட் சபை வெளியிட்டுள்ளது.

ஒக்டோபர் 15 ஆம் திகதி நடைபெறவிருந்த இந்தியா - பாகிஸ்தான் போட்டி ஒக்டோபர் 14 ஆம் திகதிக்கு மாற்றப்பட்டுள்ளது.

இதனால், டெல்லியில் ஒக்டோபர் 14 ஆம் திகதி நடைபெறுவதாக அறிவிக்கப்பட்ட ஆப்கானிஸ்தான் - இங்கிலாந்து போட்டி ஒக்டோபர் 15 ஆம் திகதிக்கு மாற்றப்பட்டுள்ளது.

ஹைதராபாத்தில் இலங்கை - பாகிஸ்தான் மோதவுள்ள போட்டி ஒக்டோபர் 12 ஆம் திகதியில் இருந்து 10 ஆம் திகதிக்கு மாற்றப்பட்டுள்ளது.

லக்னோவில் நடைபெறும் தென்னாபிரிக்கா - அவுஸ்திரேலியா அணிகளுக்கிடையிலான போட்டி ஒக்டோபர் 13 ஆம் திகதிக்குப் பதில் 12 ஆம் திகதி நடைபெறும் என அறிவிக்கப்பட்டிருக்கிறது.

இதேபோல், சென்னையில் ஒக்டோபர் 14 ஆம் திகதி நடைபெறுவதாக அறிவிக்கப்பட்ட பங்களாதேஷ் - நியூசிலாந்து போட்டி ஒக்டோபர் 13 ஆம் திகதிக்கு மாற்றப்பட்டுள்ளது. இது பகலிரவுப் போட்டியாக நடைபெறும்.

லீக் சுற்றின் கடைசியில் நவம்பர் 12 ஆம் திகதி நடைபெறுவதாக இருந்த இரண்டு போட்டிகள் நவம்பர் 11 ஆம் திகதிக்கு மாற்றப்பட்டுள்ளன.

அதன்படி காலை 10:30 மணிக்கு அவுஸ்திரேலியா - பங்களாதேஷ் அணிகள் புனேவிலும், பிற்பகல் 2 மணிக்கு நடைபெறவுள்ள போட்டியில் இங்கிலாந்து - பாகிஸ்தான் அணிகள் கொல்கத்தாவிலும் விளையாடவிருக்கின்றன.

நெதர்லாந்திற்கு எதிரான இந்தியாவின் கடைசி லீக் போட்டி 11 ஆம் திகதியில் இருந்து 12 ஆம் திகதிக்கு மாற்றப்பட்டுள்ளது. இப்போட்டி பெங்களூருவில் பகலிரவுப் போட்டியாக நடைபெறும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

உலக கிண்ண கிரிக்கெட் தொடர் ஒக்டோபர் 5 ஆம் திகதி முதல் நவம்பர் 19 ஆம் திகதி வரை நடைபெறவிருக்கிறது. ஆரம்ப மற்றும் இறுதிப் போட்டிகள் அகமதாபாத்தில் உள்ள நரேந்திர மோடி மைதானத்தில் நடைபெறவுள்ளன. (கோ)



# மேலும் சில செயற்கைக் கோள்களை அனுப்பிய சீன விண்வெளி நிறுவனம்

சீன விண்வெளி ஆய்வு நிறுவனத்தினால் ஜியுகுவாங் செயற்கைக்கோள் ஏவுதளத்தில் இருந்து வர்த்தகப் பயன்பாடுகளுக்கான செயற்கைக் கோள்களைத் தாங்கிய சீரியஸ்-1 என்ற ரொக்கெட் ஏவப்பட்டுள்ளது.

இந்த ரொக்கெட்டில் ஜியுகுவாங்-1 உட்பட வர்த்த ரீதியிலான தேவைகளுக்குப் பயன்படும் 7 செயற்கைக் கோள்கள் அனுப்பப்பட்டு உள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இவை திட்டமிட்ட சுற்றுப்பாதையில் வெற்றிகரமாக நிறுத்தப்பட்டதாக சீன விண்வெளி ஆய்வு நிறுவனம் தெரிவித்துள்ளது. (கோ)

# ஓரிரு நாட்களில் மழை பெய்யாவிட்டால் யாழ் மாவட்ட நிலை மேலும் மோசமாகும்

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் எதிர்வரும் ஓரிரு நாட்களில் மழை பெய்யாவிடின் நிலைமை மேலும் மோசமாகும் என்று யாழ். பல்கலைக்கழக புவியியல்துறை விரிவுரையாளர் நாகமுத்து பிரதீபராஜா எச்சரித்துள்ளார்.

இதேவேளை, யாழ்ப்பாணம் மாவட்டத்தில் 69,113 பேருக்கு குடிதண்ணீர் இல்லாமல் அல்லல்படுகின்றனர் என்று மாவட்ட அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையத்தின் உதவிப் பணிப்பாளர் என்.சூரியராஜ் கடந்த சில தினங்களுக்கு முன்னர் தெரிவித்திருந்தார்.

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் நெடுந்தீவு, ஊர்காவற்துறை, சாவகச்சேரி மற்றும் மருதங்கேணி பிரதேச செயலக பிரிவுகளுக்கு உட்பட்ட பகுதிகளில் வசிக்கும் 21 ஆயிரத்து 714 குடும்பங்களைச் சேர்ந்த 69,113 பேர் குடிதண்ணீர் இல்லாமல் அல்லல்படுகின்றனர்.

குறித்த பிரதேச செயலர்களின் கோரிக்கைக்கு அமைவாக அப்பகுதி மக்களுக்கான குடிதண்ணீர் விநியோகத்தை முன்னெடுக்க நடவடிக்கை எடுத்துள்ளோம், என்றும் அவர் குறிப்பிட்டிருந்தார்.

# கந்தபுரம் வாணி வித்தியாலய மாணவர்களுக்கு இணைந்த கரங்களால் கற்றல் உபகரணங்கள்





(நூருல் ஹுதா உமர்)

வவுனியா கல்வி வலயத்தில் உள்ள கந்தபுரம் வாணி வித்தியாலய மாணவர்களுக்கு தேவையான கற்றல் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு அப்பாடசாலையின் அதிபர் ச. சண்முகரத்தினம் தலைமையில் இன்றைய தினம் பாடசாலையின் மண்டபத்தில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் பாடசாலையின் பகுதித்தலைவர் திருமதி. தனபாலசிங்கம், ஆசிரியர்கள் திருமதி. ப. சிவக்குமார், திருமதி. எஸ். தவநேசன் ஆகியோரும் இணைந்த கரங்கள் அமைப்பின் இணைப்பாளர்களான பெ. விவேகானந்தன், கோ. சிவானந்தன் ஆகியோரும் கலந்து கொண்டு பாடசாலை மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள், பாதணிகள் என்பவற்றை வழங்கி வைத்தனர்.




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.68, குருசெட் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 11.08.2023இல் வெளியிடப்பெற்றது.